# மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை

## குழந்தைகளுக்கு குடற்புழு நீக்கும் திட்டம்

**அங்கன்வாடி பணியாளர்களுக்கான சுகாதாரக்கல்வி தகவல்கள்(AWW)**

**தேசிய குடற்புழு நீக்க முகாம்**

**ஆகஸ்ட்-2023**

| | | |
|---|---|---|
| தேசிய குடற்புழு நீக்க நாள் | 17.8.2023 | வியாழன் |
| விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் | 24.8.2023 | |

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை தமிழ்நாடு-6

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை

17.8.2023 அன்று குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது

அங்கன்வாடி பணியாளர்களுக்கான சுகாதாரக்கல்வி தகவல்கள் (AWW)

நாடு தழுவிய குடற்புழு நீக்க வாரம் ஆகஸ்ட்-2023 நடைபெறுகிறது. விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் 24.8.2023வியாழன் அன்று அனைத்து அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களில்நடைபெறும். மேலும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும்தனியார் பள்ளிகள், கல்லூரிகளில் தேவைகேற்ப நடைபெறுகின்றது.

| | | |
|---|---|---|
| தேசிய குடற்புழு நீக்க நாள் | 17.8.2023 | வியாழன் |
| விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் | 24.8.2023 | |

**குடற்புழு பாதிப்பு எவ்வாறு ஏற்படுகிறது ?**

குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர் திறந்த வெளியில் மலம்கழிக்கும் போது புழுக்களின் முட்டைகள் மண்ணில் கலந்து வளர்கின்றன.

அசுத்தமான கைகள், சுகாதாரமற்ற உணவுகள் உட்கொள்ளுதல் மற்றும் தோலின் வழியாக புழுக்கள் உடலினுள் உட்செல்கிறது.

முட்டைகள் மற்றும் சிறு புழுக்கள் குடலில் வளர்ச்சி பெற்று முதிர்ந்த புழுக்களாகி உடல்நலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

- ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு மற்றும் சுகவீனம்
- பசியின்மை
- இரத்தசோகை
- குமட்டல், வாந்தி .
- வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு

**குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகள்·**

- இரத்தசோகையை தடுக்கிறது .
- அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது
- குழந்தைகள் நாள்தோறும் பள்ளிக்கு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு வருவது அதிகரிக்கிறது.

**அங்கன்வாடி பணியாளர்கள் – குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குதல்**

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 1 முதல் 5வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், 1 முதல் 19 வரை அனைத்து குழந்தைகளுக்கும் அல்பெண்டசோல் மாத்திரை அங்கன்வாடி மையத்தில் மற்றும் துணை சுகாதார நிலையத்தில் வழங்கப்படும்.

- 1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 1/2 மாத்திரை (200 mg) (பொடியால்)
- 2 வயதிற்கு மேல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 1 மாத்திரை அல்பெண்டசோல் (400 mg)
- 5 முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 1 மாத்திரை அல்பெண்டசோல் (400 mg) வழங்கப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கு அல்பெண்டசோல் மாத்திரை கொடுத்து நன்றாக சப்பி மென்று சாப்பிடுவதற்கு அறிவுறுத்தி பார்வையிட வேண்டும்.

குழந்தைகள் மாத்திரைகளை மென்று உட்கொள்ள சுந்தமான குடிநீர் வசதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். சிறு குழந்தைகளுக்கு மாத்திரைகளைப் பொடியாக்கி நீரில் கரைத்து கொடுக்க வேண்டும்.

மாத்திரையை அப்படியே விழுங்கச் செய்ய கூடாது.

**முக்கிய அறிவுரைகள்**

1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 1/2 மாத்திரை (200 mg),2 முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 1மாத்திரை அல்பெண்டசோல் (400 mg) வழங்கப்பட வேண்டும்.

**குழந்தைகள் / வளர் இளம் பருவத்தினர் நோய்வாய்ப்பட்டிருப்பின் மாத்திரைகள் வழங்க வேண்டாம், குணமடைந்த பிறகு மாத்திரை வழங்கலாம்.**

தேசிய குடற்புழு நீக்க நாளன்று அல்பெண்டசோல் மாத்திரை உட்கொள்ளாத குழந்தைகளின் பெயர் பட்டியலுடன் வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு விடுபட்ட குழந்தைகளுக்கு சிறப்பு முகாம் அன்று (Mop Up Day) 24.8.2023 அல்பெண்டசோல் மாத்திரை வயதிற்கேற்றார்போல் வழங்க வேண்டும் .

பள்ளி செல்லா குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு வரவழைத்து அல்பெண்டசோல் மாத்திரைகளை உட்கொள்ள செய்தல் வேண்டும்.

அங்கன்வாடி பணியாளர்கள் மீதமுள்ள அல்பெண்டசோல் மாத்திரைகளை கிராம சுகாதார செவிலியரிடம் உரிய அறிக்கை படிவத்துடன் சிறப்பு ஒப்படைக்க வேண்டும்.

- தேசிய குடற்புழு நீக்க (NDD) முகாம் அன்று அங்கன்வாடி மையங்கள் திறந்திருக்க வேண்டும் (காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை)
- 1–19 வயதுடைய குழந்தைகள் பட்டியல் அங்கன்வாடி பணியாளர் வசம் சரிபார்த்து வைத்திருக்க வேண்டும்
- **தங்கள் பகுதியில் உள்ள 20 முதல் 30 வயதுடைய பெண்களுக்கு – (கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர) தேசிய குடற்புழு நீக்க முகாமில் ஒரு அல்பெண்டசோவ் (400 மி.கி) மாத்திரை மட்டும் வழங்கப்பட வேண்டும்.**
- தேசிய குடற்புழு நீக்க (NDD) முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்து பயனாளிக்கு முன்கூட்டியே தகவல் வழங்கி, முகாமிற்கு அழைத்து வரச் செய்ய வேண்டும்.
- அங்கன்வாடி மையத்தில் சுத்தமான குடிநீர், டம்ளர் வசதி செய்திருக்க வேண்டும்.
- சாப்பிட்ட பின் (காலை உணவு / மதிய உணவு) மாத்திரை வழங்க வேண்டும்.
- தங்கள் பகுதியில் உள்ள அனைத்து 1–19 வயது குழந்தைகளுக்கு மாத்திரை கிடைத்துள்ளதை உறுதி செய்ய வேண்டும்.